# THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004

Prot. No. CCL 2/2026

04.06.2026

## சுற்றறிக்கை

# குருமட தினம்

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே !*

திருத்தூதர்களான புனித பேதுரு மற்றும் புனித பவுல் ஆகியோரின் திருவிழா (ஜூன் 29) நமது திருஅவையின் பொதுக் குருத்துவப் பயிற்சி நிலையமான திருவனந்தபுரம் புனித மரியன்னை மலங்கரை குருத்துவக் கல்லூரியின் நிறுவல் ஆண்டு விழாவாகும். இந்நாள் குருமடதினமாக கொண்டாடப்படுகின்றது.

இஸ்ராயேல் மக்களை இறைவனுடைய மக்களாக நிலை நிறுத்திய உடன்படிக்கையின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று கடவுள் எல்லாக் குலங்களுக்கும் நிலப்பகுதிகளை வழங்கிய போது, லேவி குலத்தாருக்கு தனியான பங்கை வழங்காமல், "நானே அவர்களுடைய பங்கு" என்று கூறியதேயாகும் (இச 10:9). மேலும், ஆலயப் பணிகளில் ஈடுபட்டிருந்தோர், இறைவனுக்குச் செலுத்தப் பட்ட காணிக்கைகளிலிருந்து தங்களது வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வழியையும் கடவுள் ஏற்படுத்தினார். உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், லேவியர்கள் கடவுளுக்காக மீண்டும் அர்ப்பணிக்கப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டனர் என்பதைத் திருமறைகள் எடுத்துக் காட்டுகின்றன (எஸ்ரா 8:24-30).

பெந்தக்கோஸ்தே காலத்தை பக்தியுடன் அனுசரித்து வரும் நாம், இறைவனுடைய மக்களாக நம்மை நாமே புதுப்பித்துக் கொள்ளும் இந்த வேளையில், இவ்வாண்டின் குருமட தினத்தை கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதாகும்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை தனக்கென ஒரு குருத்துவக் கல்வி மையத்தை 1983-ஆம் ஆண்டில் நிறுவி, நீண்டகாலக் கனவை நனவாக்கியது. அந்நாள்முதல், அதன் கட்டட வளர்ச்சிக்கும் அன்றாடச் செயல்பாடுகளுக்கும் இறைமக்கள் அளித்து வரும் விசுவாசமிக்க தாராள பங்களிப்பை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

இறைவனின் எல்லையற்ற கருணையால், நமது இறையியல் கல்லூரியானது அதன் வரலாற்றிலேயே மிகப் பெரிய புதுப்பிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் சிற்றாலயத்தின் பலிபீடப் பகுதி புதுப்பிக்கப்பட்டது; உணவகம் சீரமைக்கப்பட்டது; நுழைவாயில் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

இறையியல் கல்விப் பிரிவை ஒரு முழுமையான கல்வி நிறுவனமாக உயர்த்துவதர்குத் தேவையான கூடுதல் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, கடந்த ஆண்டு புதிய வகுப்பறைகள், நிறுவன அலுவலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறைகள் கட்டப்பட்டு அர்ச்சிக்கப்பட்டன. இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் இந்த ஆண்டிலேயே தொடங்கப்படும் என நம்பப்படுகிறது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட கட்டட மற்றும் புதுப்பிப்புப் பணிகளுக்காக பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. மேலும், சுமார் நாற்பது ஆண்டுகள் பழமையான முதல் கட்டடத்தை முழுமையாகப் புதுப்பிப்பதற்குப் பெரிய தொகை தேவைப்படுகிறது. இதுவரை செலவிடப்பட்ட தொகையை விட அதிகமான நிதி அதற்குத் தேவைப்படும்.

திருச்சபையின் தலைவராகிய நான், இதுவரை மேற் கொள்ளப்பட்ட பணிகளுக்குத் தேவையான நிதியானது

வெளிநாடுகளில் வாழும் நமது விசுவாசச் சமூகங்கள், குருத்துவக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களான அருட்தந்தையர்கள் மற்றும் நமது நலன்விரும்பும் நண்பர்கள் ஆகியோரின் தாராள ஆதரவினால் திரட்டப்பட்டது என்பதை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். மேலும், நமது இறைமக்களின் ஒத்துழைப்பின் மீதான நம்பிக்கையே, இப்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் துணிவை எமக்குத் தருகிறது.

புதுப்பிப்புப் பணிகள் தடையின்றி நடைபெற்று வந்தாலும், குருத்துவ கல்லூரியின் அன்றாடச் செயல்பாடுகள் கடுமையான நிதிச் சுமையை எதிர்கொண்டு வருகின்றன. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நமது பங்குகள் இணைந்து இந்நோக்கத்திற்காக கணிசமான தொகையைத் திரட்டினோம். அப்போது கிடைத்த நிதியும் பின்னர் பெறப்பட்ட உதவித் தொகைகளும், கல்லூரியின் நிலுவைக் கடன்களை அடைக்கவும், நிலையான வருவாய் தரும் பண்ணை வளர்ச்சிக்கும், அவசியமான பழுதுபார்ப்புப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டன.

தற்போது, குருத்துவக் கல்லூரியின் ஆண்டு வருவாய்க்கும் ஆண்டு செலவுக்கும் இடையே கணிசமான பற்றாக்குறை நிலவுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அது ஈடுசெய்யப்படாததால் முப்பது இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான கடன் ஏற்பட்டுள்ளது.

நமது திருஅவையின் மதிப்புமிக்க நிலையான நிறுவனங்களில் ஒன்றான குருத்துவக் கல்லூரியை நடத்துவதற்கு, முந்தைய காலங்களைப் போல வெளிநாட்டு உதவிகளைச் சார்ந்திருப்பது இனி பொருத்தமல்ல. நிதி தொடர்பான புதிய சட்டம் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகளும் அத்தகைய ஏற்பாடுகளுக்கு இடமளிப்பதில்லை. திருச்சபையின் பொதுப்பணிகளுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளும் இன்று மிகவும் குறைந்து விட்டன.

எனவே, நிலையான வருவாய் வழிகளை அதிகரித்து, குருத்துவக் கல்லூரியை நிதி தன்னிறைவு பெற்ற நிறுவனமாக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை முழுப் பலனை அளிக்க இன்னும் சில காலம் தேவைப்படும். இந்நிலையில்,

நமது நம்பிக்கை சமூகம் மீண்டும் ஒருமுறை இதில் தாராள மனதுடன் அக்கறை செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு குருமட தினத்தில் பங்குத் தந்தையர்களும், பொறுப்பாளர்களும் சிறப்பு காணிக்கை மற்றும் பிற நன்கொடைகள் மூலம் தொகைகளைத் திரட்டி, தாமதமின்றி மறைமாவட்ட மையங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், தனிநபர்களும் நிறுவனங்களும், குறைந்தபட்சம் ஒரு குருத்துவ மாணவரின் கல்விச் செலவுகளை ஏற்றுக்கொள்ளும் அளவிலான உதவித் தொகையை வழங்குமாறு அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். இது இறைவனின் அருளைப் பெறும் ஓர் உயர்ந்த வாய்ப்பாக அமையும்.

இவ்விடயத்தில் குருத்துவக் கல்லூரி நிர்வாகத்தினர் உங்களை அணுகும் போது, அவர்களுக்கு உரிய ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சபையைப் பல்வேறு வழிகளில் வலுப்படுத்துவதற்காக, ஒரு நம்பிக்கை சமூகமாக நீங்கள் தொடர்ந்து அளித்து வரும் அன்பான ஊக்கத்திற்கும் ஆதரவிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புனித பேதுரு மற்றும் புனித பவுல் திருவிழாவின் அருளும் ஆசீர்வாதமும் உங்கள் அனைவர் மீதும் நிறைவாக பொழிய இறைவனை வேண்டுகிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

இவண்,
ஆண்டவரில் உங்கள் எளிய ஊழியன்,

காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையின்
உயர்பேராயர் - காதோலிக்கோஸ்